உலகத் தமிழர் பேரவை
Global Tamil Forum

**உலகத் தமிழர் பேரவைத் தலைவர் மறைதிரு டாக்டர் இம்மேனுவெல் அவர்களின் தமிழ் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி**

எனது அனைத்து சகோதர சகோதரிகளுக்கும் தமிழ் புத்தாண்டான இன்று, ஏப்ரல் 14, எனது உளங்கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தினம் நமக்கு நமது நீண்டகால தமிழ் பாரம்பரியத்தை நினைவூட்டுகிறது. இவ்வுலகில் ஒரு குறிப்பிட்ட நிலத்தில் ஒரு சிறப்பான இயற்வளம், மொழி, பண்பாடு, மற்றும் இதர சிறப்புகளைக்கொண்ட தமிழர்களாக நாம் பிறந்தது ஆண்டவனின் அருளாகும். இது நாம் ஒரு குறிப்பிட்ட சமயத்தில் இணைவதற்கு முன்பே ஆண்டவன் வழங்கிய முதல் பரிசாகும்.

தமிழ் புத்தாண்டைக் கொண்டாடுவது நமக்குள் தமிழாக உறைந்துள்ள அனைத்தையும் மகிழ்வுடனும் நன்றியுடனும் அங்கீகரிப்பதாகும். சுருங்கக்கூறின், இது நம்முள்ளிருக்கும் தமிழ்த் தன்மையைக் கொண்டாடுவதாகும். நாம் பல மொழிகளைக் கற்கலாம், பல பண்பாடுகளை, இசைகளை, நாடகக்கலைகளை ரசிக்கலாம். ஆனால், நாம் நமக்குச் சொந்தமானதைச் சிறுமைப்படுத்தக்கூடாது. மகாத்மா காந்தி கூறினார்: **"உலகின் அனைத்துப் பண்பாடுகளையும் என் இல்லத்தினுள் வரவேற்கிறேன். ஆனால், என்னை எனக்குச் சொந்தமான பண்பாட்டிலிருந்து வேரறுக்கும் சக்தி பெற்ற பண்பாடு இருக்க முடியாது."**

இக்கொண்டாட்டங்கள் நமது பண்பாட்டு பாரம்பரியங்கள் குறித்து சிந்திப்பதற்கான வாய்ப்புகளை மட்டும் வழங்கவில்லை; சிறீலங்காவில் வாழும் நமது அன்புக்குரிய சொந்தபந்தங்களின் தற்போதைய அவலநிலைகள் குறித்தும், இத்தீவில் தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்தும் சிந்திப்பதற்கான ஒரு வாய்ப்பாகும்.

முள்ளிவாய்க்கால் கொடூரத்திற்குப் பின்னர் வடகிழக்கில் சிறீலங்கா அரசாங்கம் மேற்கொண்டு வரும் சிங்கள காலனித்துவ செயல்பாடுகள், இராணுவ மற்றும் புத்தமயமாக்கும் திட்டங்கள் நமது இயற்வளங்களுக்கும் தாயகத்திற்கும் மருட்டலாக இருந்து வருகின்றன. மேலும், கொலைகள், காணாமல் போய்விடுதல் மற்றும் ஊடக கட்டுப்பாடுகள் போன்ற மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன.

இருப்பினும், மெய்ம்மை மற்றும் நீதி வெற்றி பெறும் என்ற நம்பிக்கையை நாம் இழக்கக்கூடாது. நிபுணர்கள் குழுவின் அறிக்கை குறித்த ஐநா தலைமைச் செயலாளரின் முடிவிற்காக நாம் ஆவலோடு காத்திருக்கும் வேளையில், தமிழ்த்

Tel: 44+ (0)207 960 6879/6881
**Global Tamil Forum**
**10 Greycoat Place, London, SW1P 1SB**
Email: info@globaltamilforum.org
Web: www.globaltamilforum.org

தன்மைக்கு எதிரான அரசாங்கத்தின் மிகக் கொடிய, சட்ட விரோத நடவடிக்கைகளை முறியடிக்க நம்மாலான அனைத்தையும் செய்வோம் என்று சூளுரைப்போமாக.

உலகத் தமிழர் பேரவை மற்றும் உலக முழுவதிலுமுள்ள முக்கியமான இணைப்பு அமைப்புகளின் செயல்பாடுகள் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு அரசியல் செயல்திட்ட நிரலில் கூடுதல் முக்கியத்துவம் அளிப்பதற்கு கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. நமது முயற்சிகளுக்கு மேலும் பலர் நம்முடன் இணைந்து ஆதரவு நல்குவதை நான் விரும்புகிறேன்.

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகள் உரித்தாகுக.

அன்புடன்,

மறைதிரு டாக்டர் எஸ்.ஜே.இம்மேனுவெல்,
தலைவர்,
உலகத் தமிழர் பேரவை